# யூஎன்டிபி திட்டத்தைப் பற்றி கவலைப்படுகிறீர்களா?

சமூக மற்றும் சுற்றுப்புற இணங்குதல் பிரிவு (SECU- ஷோசியல் அண்ட் என்விரான்மென்டல் கம்ப்ளையன்ஸ் யூனிட்)

பங்குதாரர் பதில் இயக்கம் (SRM- தி ஸ்டேக்ஹோல்டர் ரெஸ்பான்ஸ் மெக்கானிசம்)

*முன்னுரை-*

யூஎன்டிபி என்றழைக்கபடும் ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத்தின் ஆதரவுக்குள்ளாகிய திட்டங்களுள் ஏதேனும் ஒன்று, தனிப்பட்ட முறையில் உங்களுக்கோ அல்லது உங்கள் சமூகம் மற்றும் சுற்றுச்சூழல் ஆகியவற்றிற்கோ பாதிப்பு அளித்திருக்கிறது அல்லது பாதிப்பு அளிக்கக்கூடியது என்று நீங்கள் கருதினால், யூஎன்டிபி'யின் சமூக மற்றும் சுற்றுப்புற இணங்குதல் பிரிவு (SECU- Social and Environmental Compliance Unit -ஷோசியல் அண்ட் என்விரான்மென்டல் கம்ப்ளையன்ஸ் யூனிட்) மற்றும்/அல்லது பங்குதாரர் பதில் இயக்கம் (SRM- The Stakeholder Response Mechanism- தி ஸ்டேக்ஹோல்டர் ரெஸ்பான்ஸ் மெக்கானிசம்) ஆகியவற்றிடமிருந்து தகுந்த உதவியை கோரலாம்

*இணக்கம் ஆய்வு-* ***யூஎன்டிபி’யின் சமூக மற்றும் சுற்றுச்சூழல் பற்றிய வாக்குறுதிகள் குறித்த குறைகளை தீர்க்க செயல்படுதல்***

யூஎன்டிபி'யின் திட்டங்கள் அனைத்தும் யூஎன்டிபி விதித்த தரத்தை பின்பற்ற வேண்டும். மாறாக ஏதேனும் ஒரு திட்டம் அத்தகைய தரத்தை பின்பற்றவில்லை என்று கருதும், அத்திட்டத்தினால் பாதிக்கப்பட்ட சமூகத்தை சேர்ந்த நபர்கள் கொடுக்கின்ற புகார்களை விசாரித்து, அதன்பின் அத்தகைய குறைகளை எப்படி கையாள வேண்டும் என்ற தீர்வுகளை பரிந்துரை செய்யும்.

*பங்குதாரர் பதில் இயக்கம்-* ***வழக்குகள் மற்றும் குறைகளை கூட்டத்தார்கள் தீர்க்க உதவுதல்***

பங்குதாரர் பதில் இயக்கம் (தி ஸ்டேக்ஹோல்டர் ரெஸ்பான்ஸ் மெக்கானிசம்), யூன்டிபி திட்டத்தினால் பாதிக்கப்பட்ட பங்குதாரர்கள், யூன்டிபி’யின் அரசு மற்றும் அரசு சாரா கூட்டு நிறுவனங்கள் மற்றும் பலர், ஒருங்கிணைந்து யூஎன்டிபி’யின் ஆதரவுக்குள்ளாகிய திட்டங்களின் சமூக மற்றும் சுற்றுப்புற விளைவுகள் பற்றிய வழக்குகள் மற்றும் குறைகளை தீர்க்க தக்க உதவிகளை செய்யும்.

*யார் வழக்கு பதிவு செய்யலாம் ?*

தங்களுடைய நலன் அல்லது தங்களுடைய சுற்றுப்புறம் யூஎன்டிபி'யின் திட்டத்தினால் பாதிக்கக்கூடும் என்று கருதும் எந்தஒரு தனி நபரோ அல்லது ஒரு சமூகமோ வழக்கு பதிவு செய்யலாம். மேலும் சிவில் சமூக அமைப்பு போன்ற பிரதிநிதி தங்களுடைய பெயர் மற்றும் அடையாளங்களை பாதுகாக்குமாறு வேண்டிக் கொள்ளலாம்.

***எங்கே கோரிக்கை தாக்கல் செய்யலாம்:***

தங்களுடையஃ SECU கோரிக்கைகள் மற்றும் கேள்விகள் அனைத்தையும் secuhotline@undp.org என்ற முகவரிக்கு அனுப்பவும்

SRM கோரிக்கைகள் அனைத்தும் கோரிக்கை விடும் நபருடைய நாட்டில் உள்ள யூஎன்டிபி அலுவலகத்தில் விண்ணப்பிக்கலாம் அல்லது யூஎன்டிபி SRM குழுஃ தலைமை செயலகத்துக்குஃ stakeholder.response@undp.org என்ற முகவரிக்கு அனுப்பலாம்.

வெவ்வேறு நாட்டில் இருக்கும் யூஎன்டிபி அலுவலகங்கள் பற்றிய தொடர்பு விவரங்கள் யூஎன்டிபி'யின் வலைத்தளமாகியஃ www.undp.org இல் கொடுக்கப்பட்டுள்ளது.

***கோரிக்கையில் சேர்க்கப்பட வேண்டிய விவரங்கள்:***

தங்களுடைய கோரிக்கையில் கீழே கொடுக்கப்பட்டுள்ள விவரங்களை சேர்க்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது

- தங்களுடைய பெயர், முகவரி, தொலைபேசி எண் மற்றும் பிற தொடர்பு விவரங்கள். கோரிக்கை விடுப்பவர் முதற்கட்ட மதிப்பீட்டின் போது தங்களுடைய அடையாளத்தை ரகசியமாக வைத்துக்கொள்ள விரும்பினால், அதை தெரிவிக்கவும்.
- சம்பந்தப்பட்ட யூஎன்டிபி திட்டத்தின் பெயர், இடம் மற்றும் அத்திட்டத்தின் இயல்பு ஆகிய விவரங்கள்.
- கோரிக்கை விடப்பட்டுள்ள யூஎன்டிபி திட்டமானது, எப்படி தங்களுக்கு பாதிப்பு அளித்திருக்கிறது அல்லது அளிக்கக்கூடும் என்று கோரிக்கை விடுத்துள்ளவர் கருதுகிறார் போன்ற விவரங்கள்.
- கோரிக்கை அளித்தவர்கள் கோரிக்கையில் குறிப்பிட்டுள்ள திட்டம் மற்றும் பிற திட்டங்களால் ஏற்பட்ட பிரச்னைகளை எவ்வாறு கையாண்டுள்ளனர் போன்ற தெளிவான விளக்கம்.

***மேலும் தகவலறிய, கீழ்க்கண்ட வலைத்தளங்களை காணவும் :***

**www.undp.org/secu-srm**
**www.undp.org/ses**
**project.concerns@undp.org**